தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு

**உத்தரமேரூர்,**

காஞ்சிபுரம் மாவட்ட இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை திருப்புலிவனத்தில் நடந்தது.

சங்கத் தலைவர் சோழனூர் மா.ஏழுமலை தலைமை தாங்கினார். சங்கப் பொருளர் கொடூர் என்.ரவீந்திரன், அமைப்பாளர் சி.வெங்கடாசலம், துணைச் செயலர் பொ.சண்முகம், உத்தரமேரூர் சோழா அரிமா சங்கத் தலைவர் கோ.காளிதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியத் தலைவர் மா.நாகராஜ் வரவேற்றார்.

### பல்லடம் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை உயர்வு

பல்லடம்,

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.67-ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.71-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.97, சென்னையில் ரூ. 3.32.

## சேவூரில் ரூ. 7 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை ரூ. 7 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது .

இந்த வாரம் நடைபெற்ற நிலக்கடலை ஏலத்திற்கு 500 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,110 முதல் ரூ. 4,300 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 3,700 முதல் ரூ. 3,970 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ. 3,200 முதல் ரூ. 3,450 வரையிலும் ஏலம் போனது.

இதில், மொத்தம் ரூ. 7 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 93 விவசாயிகளும் இந்த ஏலத்தில் பங்கேற்றனர்.

## பால் உற்பத்தியாளர் சங்க புதிய கட்டடம் திறப்பு

**பெருந்துறை,**

சென்னிமலை ஒன்றியம், சிறுகளஞ்சி ஊராட்சிக்கு உள்பட்ட கரட்டுபாளையத்தில், பெருந்துறை சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 6.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பால் உற்பத்தியாளர் சங்க புதிய கட்டட திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் தலைமை வகித்தார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

விழாவில் பெருந்துறை வட்டாட்சியர் ஜெகநாதன், பெருந்துறை ஒன்றியக் குழு துணைத் தலைவர் விஜயன், ஈரோடு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், சென்னிமலை ஒன்றியக் குழுத் தலைவர் கருப்புசாமி,

ஒன்றியக் குழு உறுப்பினர் ராதிகா ராமசாமி, சிறுகளஞ்சி ஊராட்சித் தலைவர் கேந்திரசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாம்பழ கிடங்குகளை சுகாதார குழுவினர் திடீர் ஆய்வு

**மதுராந்தகம்,**

மதுராந்தகம் வட்டாரத்தில் சாலையோரப் பகுதிகளில் விற்கப்படுகிற மாம்பழங்கள் கார்பைடு கல் வைத்து பழுக்க வைப்பதாக வந்த தகவலை அடுத்து சுகாதாரக் குழுவினர் அண்மையில் திடீர் ஆய்வு செய்தனர்.

மதுராந்தகம் கருங்குழி, மேலவலம்பேட்டை, ஜானகிபுரம் போன்ற சுற்று வட்டாரத்தில் சாலையோரப் பகுதிகளில் மாம்பழம் விற்கப்படுகிறது.

இதை வாங்கி சாப்பிடுபவர்கள் வயிற்று வலி, பேதி போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதையொட்டி, சாலையோரப் பகுதிகளில் விற்கப்படுகிற மாம்பழங்கள் கார்பைடு கல் வைத்து பழுக்க வைப்பதாக வந்த தகவலை அடுத்து சுகாதாரக் குழுவினர் திடீர் ஆய்வு செய்தனர்.

மாவட்ட சுகாதார துணை இயக்குநர் கிருஷ்ணராஜ் உத்திரவின்படி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் நந்தகுமார் மேற்பார்வையில், ஜமீன்எண்டத்தூர் சுகாதார ஆய்வாளர் குமார் தலைமையில் 10 மருத்துவ குழுவினர் பல்வேறு இடங்களில் மாம்பழம் விற்கப்படும் இடங்களிலும், மாம்பழம் வைத்திருக்கும் குடோன்களிலும் திடீர் ஆய்வு செய்தனர். அப்போது மிக எளிதில் மாம்பழங்களை கார்பைடு கல் வைத்து பழுக்க வைத்திருப்பது கண்டறிந்தனர். இத்தகைய மாம்பழங்களை கைப்பற்றிய சுகாதார அதிகாரிகள் சுமார் 50 கிலோ மாம்பழங்களை ஆரம்பசுகாதார வேனின் கீழ் போட்டு அழித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## காய்கறிகள், பழங்கள் ஏற்றுமதி தடைநீக்க ஆய்வகம் :வேளாண் துறை நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பு

தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும், மாம்பழங்கள், காய்கறிகளுக்கு வெளிநாடுகள் தடை விதித்துள்ளன. இப்பிரச்னை தீர, பழங்கள் மற்றும் காய்கறிகள் அதிகம் விளையும் மாவட்டங்களில், ஆய்வகங்களை அமைக்க வேண்டும் என, அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழகத்தில், கிருஷ்ணகிரி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் விளையும், 'அல்போன்சா' ரக மாம்பழங்கள்; கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் விளையும், கத்தரிக்காய், பஜ்ஜி மிளகாய், குடைமிளகாய், புடலங்காய், வெள்ளரிக்காய் உள்ளிட்டவை, ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்காக, மத்திய, மாநில அரசுகள் மூலம், விவசாய கடன்களை பெற்று, விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். பசுமை குடில்கள் இதற்காக, பல லட்சம் ரூபாய் செலவில், பசுமை குடில்களை அமைத்துள்ளனர். இதற்கு, 50 சதவீதம் மானியம் கிடைத்தாலும், மீதமுள்ள தொகைக்கு, கைக்காசை தான் செலவழிக்கின்றனர். இந்நிலையில், இந்தியாவின், 'அல்போன்சா' ரக மாம்பழங்களுக்கு கடந்த, ஏப்ரலில், ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. இதன் தொடர்ச்சியாக, பச்சை மிளகாய், காய்கறிகளுக்கு, அரபு நாடுகளில் தடை விதிக்கப்பட்டது. இவற்றில், ரசாயனம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் அதிகம் இருப்பதால் தடை செய்ததாக, அந்நாடுகள் அறிவித்துள்ளன. இந்த ஆண்டு, தமிழகத்தில், மாம்பழங்கள் உற்பத்தி குறைவு என்பதால், விவசாயிகளுக்கு பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படவில்லை. ஆனால், பசுமை குடில்கள் மூலம், காய்கறிகளை பயிரிட்டு ஏற்றுமதி முயற்சியில் இறங்கிய

விவசாயிகளுக்கு, வருவாய் இழப்பு மட்டுமின்றி நஷ்டம் ஏற்படுவதற்கும் அதிக வாய்ப்புள்ளது. இதனால், வங்கி கடனை எப்படி அடைப்பது என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர். வழக்கமாக, சென்னை மற்றும் பெங்களூரு வழியாக, வெளிநாடுகளுக்கு பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. காய்கறிகள் உற்பத்தி செலவு வெளிநாடுகளுக்கு சென்ற பின், அங்குள்ள துறைமுகம் மற்றும் விமான நிலையத்தில், பழங்கள் மற்றும் காய்கறிகளை அவசர அவசரமாக, தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கு உட்படுத்துகின்றனர். ஏற்றுக் கொள்ளும் தரத்திற்கு இல்லை எனக் கூறி, அவற்றை குப்பையில் வீசுகின்றனர். இதுகுறித்த படங்கள், இ - மெயில் மூலம், விவசாயிகளுக்கும், கமிஷன் ஏஜன்ட்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செலவு; ஏற்றுமதி செலவை செய்த பின், இது போல் நடப்பதால், விவசாயிகளுக்கு பெரும் சிக்கல் ஏற்படுகிறது.வெளிநாடுகள் விரும்பும் தரத்திற்குட்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்களை அனுப்ப வேண்டும் என்றால், அவற்றை, ஏற்றுமதி செய்வதற்கு முன், அவற்றின் தரத்தை உறுதி செய்ய வேண்டும். இதற்கு, தமிழகத்தில் ஆய்வகங்களை அமைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஏற்கனவே, அரசிடம் இத்திட்டம் பரிசீலனையில் இருந்து, திடீரென கைவிடப்பட்டதாக தெரிகிறது.

இதுகுறித்து, வேளாண் ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறியதாவது:வெளிநாடுகளில், உணவை தரமறிந்து சாப்பிடுகின்றனர். ஆனால், இந்தியாவில், வயிற்றை நிரப்புவதற்காக சாப்பிடுகிறோம். தரத்தைப்பற்றி, நாம் கவலைப்படுவது இல்லை. இங்கு, 'கார்பைடு' மூலம் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை சாப்பிடுவதற்கு கூட ஆட்கள் இருக்கத் தான் செய்கின்றனர். வெளிநாடுகளில், செயற்கை உரங்களுக்கு, பதில் மண்புழு கழிவு, தென்னைநார் கழிவு, தாவரக்கழிவு, விலங்கின கழிவு, கரும்பு சக்கை, கோழிபண்ணை கழிவுகள் மூலம் தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை பயன்படுத்துகின்றனர். அவை நமக்கு அதிகளவில் கிடைத்தாலும், 75 சதவீதம் அளவிற்கு, செயற்கை உரங்களை

பயன்படுத்துகிறோம். மகசூல் அதிகம் கிடைக்கும் என்பதால், இதில், விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பழங்களில் தான், ரசாயன கலப்பு அதிகளவில் உள்ளதாக, வெளிநாடுகளில் தடை விதிக்கப்படுகிறது. இனியாவது, விவசாயிகள், இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும். வேளாண் துறையும், இதை ஊக்குவிக்க வேண்டும். மேலும், காய்கறி ஏற்றுமதிக்கு முன், தரக்கட்டுப்பாடு செய்வது அவசியம். இதற்காக, காய்கறிகள் அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் மாவட்டங்களில், ஆய்வகங்களை அரசு அமைக்கவேண்டும்.இதன்மூலம், விவசாயிகளுக்கு ஏற்படும், லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை தடுக்க முடியும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## சென்னையில் கன மழை: மின்தடையால் பாதிப்பு




**சென்னை:** சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு, திடீரென இடி, மின்னலுடன் கனமழை பெய்ததால், வெப்பத்தில் அவதிப்பட்ட பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.கடந்த சில நாட்களாக, வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்தாலும், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை பெய்யவில்லை. மாறாக, வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்ததால், பொதுமக்கள் தவித்தனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு, 12:00 மணி முதல், வானிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டது. இரவு வெப்பம் குறைந்து, குளிர் காற்று வீசியது. தொடர்ந்து, பலத்த காற்று, இடி மற்றும் மின்னலுடன் மழை பெய்யத் துவங்கியது. நள்ளிரவில் மழை

பெய்ததை அடுத்து, மின் இணைப்புகள் நிறுத்தப்பட்டன.சென்னையில், நேற்று, நள்ளிரவு முதல் பெய்த கனமழையால், பல இடங்களில், மின்தடை ஏற்பட்டது. இதனால், சென்னைவாசிகள், அவதிப்பட்டனர்.சென்னை மற்றும் புறநகரில், 27 லட்சம் மின் இணைப்புகள் உள்ளன. தமிழகத்தின், மொத்த மின் தேவையில், இவற்றின் பங்களிப்பு, 3,000 மெகாவாட் என்றளவில் உள்ளது.நேற்று முன்தினம் நள்ளிரவு முதல், சென்னை சுற்றியுள்ள பகுதிகளில், கனமழை பெய்தது. விடிய விடிய பெய்த மழையால், அதிக வெப்பத்துடன் இருந்த, டிரான்ஸ்பார்மர்களில், தண்ணீர் பட்டு பழுது ஏற்பட்டதால், பல இடங்களில், மின்சாரம் தடை செய்யப்பட்டது.குறிப்பாக, அதிகளவில் மழை பெய்த செங்குன்றம், சோழவரம், திருவொற்றியூர், மணலி, வேளச்சேரி, தாம்பரம், திருவான்மியூர் உள்ளிட்ட பகுதிகளில், காலை, 11:00 மணி வரை, மின்தடை தொடர்ந்தது.

இதுகுறித்து, எரிசக்தி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,'மழை காரணமாக, சில இடங்களில், முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக, மின்தடை செய்யப்பட்டது. மற்ற இடங்களில், பழுது காரண மாக மின் தடை ஏற்பட்டது. இரவில், மழையின் அளவிற்கு ஏற்ப, மின் வினியோகம் செய்யப்படும்' என்றார்.

### கொளப்பாக்கத்தில்...

சென்னை மாநகராட்சி பகுதியான மணப்பாக்கத்திற்கு அடுத்து, கொளப்பாக்கம் ஊராட்சி உள்ளது. இங்கு, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.மணப்பாக்கம், முகலிவாக்கம் பகுதிகள், சென்னை மாநகராட்சி எல்லையில் வருகின்றன.இந்த பகுதிகளில், மின்தடை, அவ்வளவாக இல்லை. ஆனால், மணப்பாக்கம், முகலிவாக்கம் எல்லையை ஒட்டி உள்ள கொளப்பாக்கம் ஊராட்சியில், எப்போது மின்சாரம் வரும்; எப்போது போகும் என, தெரியாது.கடந்த, 7ம் தேதி இரவு முழுவதும் மின்சாரம் இல்லை. நேற்று முன்தினம், இடி, மின்னலுடன் மழை பெய்ததால், இரவு, 11:00 மணிக்கு, மின்தடை ஏற்பட்டது. பின், நேற்று பிற்பகல், 2:00 மணிக்குத் தான், மீண்டும் மின்சாரம் வந்தது.

கொளப்பாக்கம் பகுதி மின்வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில்,'பலத்த காற்றில், மின் கம்பம் ஒன்று சாய்ந்துவிட்டது. இதனால், அதை சரிசெய்ய, அதிக கால தாமதம் ஏற்பட்டது' என்றார்.

குறைந்த மின்னழுத்தம்

இதுகுறித்து, பகுதிவாசிகள் கூறியதாவது:சாதாரண நாட்களில் கூட, இரவில் மின்தடை செய்கின்றனர். கேட்டால், எதையாவது கூறி மழுப்புகின்றனர்.எப்போதும், குறைந்த மின்னழுத்த பிரச்னை உள்ளது. அதை தீர்க்க மின்வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

## விட்டு விட்டு மழை

சூறாவளி காற்றுடன் மழை பெய்ததால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், ஆங்காங்கே, காற்றின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மரங்கள் சாய்ந்தன. நேற்று முன்தினம் இரவு துவங்கிய மழை, அதிகாலையில் ஓய்ந்தது. பகலில் வெயிலின் தாக்கம் தெரியவில்லை; வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பகலில் ஆங்காங்கே விட்டு விட்டு மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, காஞ்சிபுரத்தில், 7 செ.மீ., மழை பதிவானது.

காற்றழுத்த தாழ்வு பகுதிமழை குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது:மத்திய கிழக்கு, தென் கிழக்கு அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இந்த தாழ்வு பகுதி மேலும் வலுவடைந்து, மேற்கு, வடமேற்கு நோக்கி நகரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.அரபிக்கடலில் உருவாகியுள்ள தாழ்வுப்பகுதி, வங்கக்கடலின் ஈரப்பதத்தை ஈர்த்துக் கொண்டதால், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் மழை பெய்துள்ளது.சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் இருக்கும்; நகரில் சில பகுதிகளில் மழை பெய்யும். மேலும், சென்னை தவிர மற்ற பகுதிகளிலும், புதுச்சேரியிலும், இரு தினங்களுக்கு ஆங்காங்கே, வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்யலாம்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## சராசரிக்கும் குறைவாகவே மழை இருக்கும்

**புதுடில்லி :** "பருவமழை, இந்தாண்டு சராசரிக்கும் குறைவாகவே பெய்யும். ஆனாலும், 'எல் நினோ'வால், பெரிய அளவில் இந்தியாவுக்கு பாதிப்பு இருக்காது," என, மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்

கூறியுள்ளார்.தென்மேற்கு பருவமழை கேரளாவில் துவங்கியுள்ள நிலையில், இந்தாண்டுக்கான பருவமழை குறித்த தகவலை, மத்திய புவி அறிவியல் துறை அமைச்சரும், பா.ஜ.,வைச் சேர்ந்தவருமான ஜிதேந்திர சிங் வெளியிட்டார்.டில்லியில், செய்தியாளர்களிடம், நேற்று அவர் கூறியதாவது:ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான, தென் மேற்கு பருவ மழை காலத்தில், 93 முதல், 96 சதவீதம் வரை, மழை பெய்யும். இது, சராசரியை விட, சிறிது குறைவு. ஜூன் மாதத்தில், 93 சதவீதமாக இருக்கும் மழையின் அளவு, ஆகஸ்ட்டில், 96 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்பு உண்டு. பசிபிக் பெருங்கடலில் வெப்பநிலை அதிகரிப்பதால் ஏற்படும், 'எல் நினோ'வால், மழை அளவு குறையும் என, ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இதனால், இந்தியாவில் மழை பொழிவில், பெரிய அளவில் பாதிப்பு இருக்காது.இவ்வாறு, அவர் கூறினார்.

## செப்பனிடப்படுமா ! : உபரி நீரை வெளியேற்றும் ஓடை கால்வாய்கள்... : கனமழை காலங்களில் பயிர்கள் அழுகும் அபாயம்

**தியாகதுருகம்:** கோமுகி, மணிமுக்தா ஆறுகளில் இணையும் நீர் வரத்து வாய்க்கால்களை சீரமைத்து செப்பனிட பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம், கனமழை காலங்களில் பயிர்களில் தண்ணீர் தேங்காமல் விரைவில் வடிய வழிகிடைக்கும்.

கல்வராயன்மலையில் உற்பத்தியாகும் கோமுகி ஆற்றின் குறுக்கே கச்சிராயபாளையம் அருகிலும், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே சூளாங்குறிச்சி அருகிலும் அணை கட்டப்பட்டுள்ளது. இவ்விரு அணை மூலம் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் நேரடியாகவும், 10 ஆயிரம் ஏக்கர் நிலம் மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகிறது.

அணை நிரம்பும் போது வெளியேற்றப்படும் தண்ணீரை தடுப்பணைகளில் தேக்கிவைத்து, பாசனத்திற்கு பயன்படுத்த கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அணை நிரம்பினால் மட்டுமே ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை உள்ளது.

வயல்வெளிகளில் கனமழை பெய்யும்போது வெளியேறும் நீர், வரத்து வாய்க்கால், சிறு ஓடைகள் வழியே சென்று ஆற்றில் கலக்கின்றன.

இவ்வாறு கிடைக்கும் தண்ணீர் ஆற்றில் நீரோட்டத்தை ஏற்படுத்துவதாலும், தடுப்பணைகளில் வந்து தேங்குவதாலும் ஆற்றுப்படுகையில் நிலத்தடி நீர்மட்டம் உயர வழிவகை செய்கிறது. இதற்கு முக்கிய ஆதாரமாக உள்ள வரத்து வாய்க்கால்கள் பலவும் ஆக்கிரமிப்புகளால் காணாமல் போய்விட்டது.

பல இடங்களில் புதர்கள் மண்டி தூர்ந்துபோய் காணப்படுகிறது. இதனை சரிசெய்ய பொதுப்பணித்துறையினர் அக்கறை எடுக்கவில்லை. குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள ஏரிகள் நிரம்பும்போது வெளியேற்றப்படும் நீர் அருகில் உள்ள ஆற்றில் கலப்பதற்கு கால்வாய் அமைக்கப்பட்டிருந்தது. இது பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

அணை நிரம்பாத போதிலும், வயல்வெளிகளில் பெய்யும் மழையால் வெளியேற்றப்படும் உபரி நீர் வரத்து வாய்க்கால் மூலம் ஆற்றில் வந்து கலந்தாலே தடுப்பணைகளுக்கு ஓரளவு தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது. இதற்கு அடிப்படை ஆதாரமாக இருந்த வரத்து வாய்க்காலும், ஓடைகளும் பல இடங்களில் விளைநிலங்களாகவும், பிளாட்டுகளாகவும் மாற்றப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக கனமழை பெய்யும் தருணங்களில் வயல்களில் பெய்யும் நீர் வெளியேறமுடியாமல் தேங்கி நிற்கும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக பயிர்களுக்கு கடும் சேதம் ஏற்படுகிறது. போதிய வடிகால் இல்லாமல் தண்ணீர் தேங்கி பயிர் அழுகி வீணாவதை தடுக்கமுடியாமல் போகிறது. பல இடங்களில் நீர் வெளியேற்றப்படும் ஓடைகளின் குறுக்கே தடுத்து ஆக்கிரமித்துள்ளனர்.

உலக வங்கி நிதிஉதவியுடன் வெள்ளாற்று உபவடிநில பகுதிகளை செப்பனிடும் பணி கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டனர். இதில், ஆற்றின் கரைகளை உயர்த்தி, அருகில் உள்ள ஏரிக்கரைகளை செப்பனிட்டனர். ஏரிகளின் உபரி நீர் வெளியேறி ஆற்றில் கலக்கும் கால்வாய்களை கண்டுகொள்ளவில்லை.

இதனால் கனமழை காலங்களில் ஏரிகள் நிரம்பி நீர் வெளியேற முடியாமல், உடையும் அபாய நிலை உள்ளது. அதேபோல் நிலத்தில் பெய்யும் நீர் வடியாமல் தேங்கி பயிர்கள் வீணாகும் நிலையும் ஏற்படும். கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் பிரச்னை பெரிய அளவில் ஏற்படவில்லை.

கனமழை பெய்யும் காலங்களில் தான் நீரை வெளியேற்றும் கால்வாய்களின் முக்கியத்துவம் தெரியவரும். அந்த தருணத்தில் பயிர்கள் அழுகி சேதமாவதை வேடிக்கை பார்ப்பதை தவிர வேறு வழியில்லை.

இதற்கு தீர்வாக நீர் வரத்து ஓடைகளை முறையாக "சர்வே' செய்து கால்வாய், ஓடைகளை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கவும், அவற்றை செப்பனிட்டு சீரமைக்கவும் பொதுப்பணித் துறையினர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த பட்சம் பருவமழை விரமடைவதற்குள் முக்கிய நீர் வரத்து கால்வாய்களையாவது சீரமைக்க வேண்டும்.

## மாம்பழ சீஸன் உச்சம்: கர்ப்பிணி பெண்களை கவரும் சர்க்கரைக்கட்டிக்கு கடும் தட்டுப்பாடு

**சேலம்:** மாம்பழ சீஸன் உச்சத்தை எட்டி உள்ள நிலையில், கர்ப்பிணி பெண்கள் மத்தியில் வரவேற்பு அதிகமுள்ள, மருத்துவ குணமிக்க சர்க்கரை கட்டி ரக மாம்பழத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த ரக மாம்பழத்துக்கு ஆர்டர் குவிவதால், கிலோ, 500 ரூபாய் வரை, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில், மாம்பழ சீஸன் மார்ச் மாதம் துவங்கி, தற்போது உச்சத்தை எட்டி உள்ளது. மாம்பழத்துக்கு பெயர் பெற்ற சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அனைத்து ரக மாம்பழங்களும், விற்பனைக்கு வரும் நிலையில், பாரம்பரியமிக்க சர்க்கரை கட்டி மாம்பழம் மட்டும் விற்பனைக்கு வரவில்லை.

சேலம் பெங்களூரா, மல்கோவா, அல்போன்சா, நீலம் என, அனைத்து ரக மாம்பழங்களும், தமிழகத்தின் முக்கிய நகரங்களில், தற்போது விற்பனைக்கு வந்து கொண்டுள்ள நிலையில், இவற்றின் விலை கிலோ, 80 ரூபாய் முதல், அதிகபட்சமாக, 120 ரூபாய் வரை, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், சர்க்கரை கட்டி மாம்பழத்துக்கு, கடும் தட்டுப்பாடு நிலவுவதால், இந்த ரக மாம்பழத்தை வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்து, பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள் சர்க்கரைக் கட்டி ரகத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை பயன் படுத்தி, அவற்றின் விலையை கிலோ, 500 ரூபாய் வரை, விற்பனை செய்து வருகின்றனர்.

சேலம் மாங்காய் பழ வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் உமாபதி கூறியதாவது:

அனைத்து ரக மாம்பழங்களும் தற்போது விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கிறது. சில வாரங்களாக பெய்து வரும் மழையால், மாம்பழம் வருகையும் அதிகரித்துள்ளதால், விலை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. சர்க்கரை கட்டி மாம்பழத்தை பொறுத்த வரையில், அரிதான ஒன்றாகவே உள்ளது.

இந்த ரக மாம்பழம் அதிக அளவில் நார் இருக்கும். காய், பழுக்காத நிலையில், புளிப்பு அதிகம் இருப்பதால், அனைவரும் விரும்புவது இல்லை. பழம் நன்றாக பழுத்து விட்ட நிலையில், அப்படியே கசக்கி, ஓர் இடத்தில் துவாரம் அமைத்து, மாம்பழ சாற்றை உருஞ்சி குடித்து விடலாம். பிற மாம்பழங்களை ஒப்பிடுகையில், இதன் சுவை அலாதியாக இருக்கும். ஆனால், இந்த ரக மாம்பழத்துக்கு பெண்கள் மத்தியில் குறிப்பாக கர்ப்பிணி பெண்களிடம் வரவேற்பு அதிகம், என்றார்.

## மழைவாழ் மக்களின் விவசாய அனுபவங்கள் : கல்லூரி மாணவியருக்கு விளக்க பயிற்சி

**கோபிசெட்டிபாளையம்:** தொட்டகோம்பை மழைவாழ் மக்களின், விவசாய அனுபவங்கள் குறித்து, வேலூர் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியை சேர்ந்த, மாணவியருக்கு பயிற்சி முகாம் நடந்தது.

மேற்கு தொடர்ச்சி மலையும், கிழக்கு தொடர்ச்சி மழையும், சத்தியமங்கலம் காட்டுப்பகுதியில் மங்களப்பட்டி என்ற இடத்தில் சந்திக்கின்றன. பவானி ஆறும், மோயாறும், இந்த காட்டுப்பகுதி வழியாக ஓடுகின்றன.

இந்த காட்டுப்பகுதியை நோக்கி, முதுமலை மற்றும் பந்திப்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து, யானைகள் அதிகளவில் வந்து செல்கின்றன. சத்தி வனத்தில், 1,000க்கும் மேற்பட்ட யானை, மான், புலி, கருஞ்சிறுத்தை, சிறுத்தை கழுதைப்புலி உள்ளிட்ட வனவிலங்குகள் வசிக்கின்றன. இச்சூழலில், மலைவாழ் மக்கள், மலைப்பகுதியில் வசிப்பதுடன், விவசாயமும் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கோபி தாலுகா, கணக்கம்பாளையம் மக்கள் நலச்சங்கம் மூலம், வேலூர், ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியை சேர்ந்த, இறுதியாண்டு மாணவியர்கள், தொட்டகோம்பை மழைவாழ் மக்களை சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு, கடந்த, ஐந்தாம் தேதி முதல், 14ம் தேதி வரை, பயிற்சி முகாம் தொட்டகோம்பையில் நடக்கிறது. மழைவாழ் மக்களின் விவசாய அனுபவங்கள், சுய உதவிக்குழுக்களின் நடவடிக்கைகளை பட்டியலிட்டனர்.

மக்கள் நலச்சங்க செயலாளர் நடராஜன், பயிற்சி அளித்தார். மாணவி பத்மபிரியா தலைமையில், கிருத்திகாதேவி, கோல்டா மரியா சிரியக் ஜெசீனா, சாந்தினி, சுபஸ்ரீ ஆகியோர் பயிற்சி முகாமில் பங்கேற்றனர்.

## சாகுபடி பரப்பு அதிகரித்தும் மிளகாய் சாகுபடியில் லாபமில்லை! வத்தல் கையிருப்பு இன்றி விவசாயிகள் கவலை

**ஆர்.எஸ்.மங்கலம் :** ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுப்பகுதியில் சாகுபடி பரப்பளவு அதிகரித்தும், போதிய மழையின்றி மிளகாய் சாகுபடியில் லாபமில்லை. மிளகாய் வத்தல் கையிருப்பு இன்றி விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

மாவட்டத்தின் நெல் களஞ்சியமாக திகழும் திருவாடானை தாலுகாவில் நெல்லுக்கு அடுத்தபடியாக ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர், சோழந்தூர், உப்பூர், புல்லமடை உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில் அதிகளவில் குண்டு மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் முதல் வாரத்தில் இப்பகுதியில் மிளகாய் விதைப்பு செய்யப்படுகிறது.சாகுபடி செய்யப்பட்ட 90 நாட்களில் காய்கள் காய்த்து மகசூல் தரும் நிலைக்கு வந்து விடுகின்றன. மிளகாய் சாகுபடிக்கு ஏற்றவகையில் சீதோஷ்ணம் அமைந்துவிட்டால் தொடர்ந்து ஐந்து மாதங்கள் வரை மகசூல் தரும்.கடந்த 2012 நவம்பரில் இப்பகுதியில் 9200 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த 2013ல் கடும் வறட்சி நிலவி நெல்பயிர்கள் கருகியதால் வயல்களை உழவு செய்துவிட்டு கூடுதலாக 17 ஆயிரத்து 200 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது.

ஆனால் முந்தைய ஆண்டில் ஏக்கருக்கு 60 முதல் 80 மூடைகள்(ஒரு மூடை 20 கிலோ) வரை மகசூல் கிடைத்தது. அப்போது குவிண்டால் ரூ.8500 வரை விற்பனையானது. கடந்தாண்டுநவம்பரில் விதைப்பு செய்யப்பட்ட மிளகாய், இந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியால் மூன்று மாதத்திற்கு முன்னதாகவே மகசூல் முடிவுக்கு வந்துவிட்டது.

ஏக்கருக்கு 30 முதல் 40 மூடைகள் வரையே மகசூல் கிடைத்தது. இதனால் இந்தாண்டு வத்தல் விலை ஏற்றம் கண்டுள்ளது. நல்ல விலை கிடைத்தும் போதிய வத்தல் கையிருப்பு இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இது குறித்து ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் முத்தையா, பாலு ஆகியோர் கூறியதாவது: இந்தாண்டு கடும் வறட்சி நிலவியதால், மிளகாய் மகசூல் குறைந்துவிட்டது. இதற்கான செலவுதொகையை விளைந்த மகசூல் மூலம் ஈடுசெய்தது போக, அடுத்தாண்டு(பிப்ரவரி) மகசூல் வரும் வரை 30 மூடைகள் வரை வீட்டில் இருப்பு வைத்திருப்போம். ஆனால் இந்தாண்டு இருப்பு வைப்பதற்கான நிலை இல்லை. நல்ல விலை இருந்தும் செலவு செய்த தொகைக்கே மகசூல் கிடைத்துள்ளது, என்றனர். மிளகாய் கொள்முதல் வியாபாரி ஒருவர் கூறுகையில், ""ஆர்.எஸ்.மங்கலத்தில் நடைபெறும் மிளகாய் சந்தைக்கு, செப்டம்பர் மாதம் வரை 300 குவிண்டால்கள் வத்தல் விற்பனைக்கு வரும். ஆனால், இந்தாண்டு ஜூன் மாதத்திலே 150 குவிண்டால் மட்டுமே வந்தது,'' என்றார்.

## அதிகாலையில் கனமழை: பூக்களை பறிப்பதில் சிக்கல்

**ஆர்.கே.பேட்டை :** ஆர்.கே.பேட்டை பகுதியில், நேற்று அதிகாலை பெய்த கனமழையால், பூக்களை பறிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனால், பூ விலையில் கடும் சரிவு நிலவியது.

ஆர்.கே.பேட்டை பகுதியில், நெல், கரும்புக்கு அடுத்தபடியாக, முல்லை, மல்லிகை, ரோஜா, கனகாம்பரம், கோழிக்கொண்டை, ஜாதிமல்லி, சம்பங்கி உள்ளிட்ட பூக்கள் பயிரிடப்படுகின்றன.

சீசனுக்கு ஏற்றபடி, பூ வரத்தில் ஏற்ற இறக்கம் இருக்கும். இதனால், பூ விவசாயிகள், தினசரி வருமானம் பார்த்து வருகின்றனர். அதிகாலை 5:30

மணியளவில் பூந்தோட்டத்தில் இருந்து பூக்களை பறித்து, திருத்தணி, வேலூர், சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

காலை 8:00 மணிக்கு பூ விலை உச்சத்தில் இருக்கும். நேரம் கூட கூட, பூக்களின் விலையில் சரிவு துவங்கும். இதனால், அதிகாலையில் பூக்களை பறித்து அனுப்புவதில் விவசாயிகள் தீவிரமாக இருப்பர்.

நேற்று அதிகாலையில், ஆர்.கே.பேட்டையில் கனமழை பெய்ததால், பூக்களை செடிகளில் இருந்து பறிப்பதில் தாமதம் ஏற்பட்டது. காலை 10:00 மணிக்கு பிறகே, பூக்கள் பறிக்கப்பட்டன. மதியம் 1:00 மணியளவில் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்ட பூக்களுக்கு வரவேற்பு இல்லை.இதனால், விலையில் கடும் சரிவு நிலவியது. நேற்று முன்தினம் 300 கிராம் முல்லை 40 ரூபாய்க்கு விற்பனை ஆனது. நேற்று மதியம் 15 ரூபாய் என்ற நிலையில் விற்பனை ஆனது.

## வாழை பயிர்கடன் தவணை காலம் நீட்டிப்பு : மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உத்தரவு

**நாமக்கல்:** வாழை பயிருக்கு, கடனை திருப்பிச் செலுத்தும் காலம், ஒன்பது மாதமாக, தொழில் நுட்ப பரிந்துரை குழு நிர்ணயம் செய்திருந்தது. அவற்றை மறுபரிசீலனை செய்து, தமிழக வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் அளித்த ஆய்வு அறிக்கையின் மூலம், தவணை காலத்தை நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயிகளுக்கு பயிர்கடன், நகை கடன் வழங்கப்படுகிறது. அவ்வாறு பெறப்படும் கடன்களை ஓராண்டுக்குள் திருப்பி செலுத்திவிட வேண்டும்.

கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், பயிர் கடன் அளவு மற்றும் தவணை காலம் நிர்ணயம் செய்யும் போது, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் வாழைப் பயிர்களுக்கான கடனை திருப்பி செலுத்தும் தவணை காலம், ஒன்பது

மாதமாகவும், திசு வளர்ப்பு கன்றுகள் மூலம் செய்யப்படும் வாழை சாகுபடிக்கு, 12 மாதம் என, தொழில் நுட்ப பரிந்துரைக்குழு தவறாக நிர்ணயம் செய்தது.

வாழை ஓராண்டு பயிர் என்பது என்பதுடன், ஒரு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை பயிர் அறுவடை செய்வதற்கு குறைந்த பட்சம் காலம், 12 மாதம். அதனால், ஒன்பது மாதங்களில் வாங்கிய பயிர் கடனை விவசாயிகள் திருப்பி செலுத்த முடியாது. குறிப்பிட்ட காலத்துக்குள் பயிர்கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு கிடைக்கும் வட்டிச் சலுகையும் இதனால், கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போனது. வாழை சாகுபடிக்கு பெறும் கடனை, ஒன்பது மாதங்களில் திருப்பி செலுத்தும் முடிவு விவசாயிகளை அதிர்ச்சி அடைய செய்தது.

ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத் தலைவர் பாலசுப்ரமணியம், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் அஜிதன் ஆகியோர் தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பினர். அதை தொடர்ந்து, தமிழக வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் பாலமோகன், விஜயகுமார் ஆகியோர் மோகனூர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, வாழை ரகங்கள், சாகுபடி செலவு, பருவகாலம், வங்கி கடன் உச்சவரம்பு நிர்ணயம் குறித்து விசாரித்தனர். மேலும், விவசாயிகள், வங்கியாளர்கள், வங்கி நிர்வாகிகளை சந்தித்து, கடந்தாண்டு சாகுபடி கடன் தவணை, வசூல் செய்த காலம் பற்றியும் விரிவான ஆலோசனை நடத்தினர்.

அதை தொடர்ந்து, அதன் அறிக்கையை தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தனர். அந்த அறிக்கையின்படி, தொடர்ந்து வாழைப்பயிர் கடன் காலத்தை, 12 மாதத்துக்கு நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. இது வாழை பயிரிட்டுள்ள விவசாயிகளை மகிழ்ச்சி அடைய செய்துள்ளது.

## 3 இடங்களில் தீவன கிடங்குகள்; வைக்கோல் சப்ளைக்கு அழைப்பு

**விருதுநகர் :** விருதுநகர் மாவட்டத்தில் மூன்று இடங்களில்,ரூ.30 லட்சம் நிதியில், கூடுதலாக தீவன கிடங்குகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வைக்கோல் வினியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள், 12 ம் தேதிக்குள் முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை அனுப்ப, கலெக்டர் ஹரிஹரன் கேட்டுகொண்டுள்ளார்.

அவர் கூறியதாவது: கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, கால்நடைகளுக்கான உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க, ரூ. 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழாயிரம்பண்ணை, திருச்சுழி, இலுப்பையூர் அரசு கால்நடை மருந்தகங்களில் தீவன கிடங்கு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில், கால்நடை வளர்ப்போர் ரேஷன் கார்டு நகலை பதிவு செய்ய வேண்டும். தீவன கிடங்குகளுக்கு தரமான உலர்ந்த வைக்கோல் 10 கிலோ கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட இடத்தில் அடுக்கி தர வேண்டும். வாரம் 15 டன் வீதம் இரண்டு முதல் மூன்று மாதம் வழங்க, விருப்பம் உள்ள விவசாயிகள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறப்பிட்டு, மூடி முத்திரையிடப் பட்ட விலைப்புள்ளியை, 12ம் தேதி மாலை 5 மணிக்குள், மண்டல இணை இயக்குனர் அலுவலகம், கால்நடை பராமரிப்பு துறை, கலெக்டர் அலுவலகம், விருதுநகர் என்ற முகவரியில்,விலை புள்ளி பெட்டியில் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம், என்றார்.

## சிறு தானிய பயிர்களில் தோல்கள் நீக்க ஆலைகள் அமைக்க கோரிக்கை

**தர்மபுரி:** சிறு தானிய பயிர்களின் தோல்களை நீக்க, விவசாயிகள் பங்களிப்புடன், ஆலைகள் அமைக்க, அரசுக்கு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மேலும், இம்மாவட்டம், மாநில அளவில், கேழ்வரகு, சாமை, சோளம் உள்ளிட்ட சிறுதானிய பயிர் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, மாவட்டத்தில் அதிகபட்சமாக, கேழ்வரகு, சாமை, சோளம், கம்பு உள்ளிட்ட சிறுதானிய பயிர்கள், 70 ஆயிரம் ஹெக்டர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

இதில், மாவட்டத்தில், அதிகபட்சமாக, கேழ்வரகு மற்றும் சாமை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், ஆண்டு தோறும், சராசரி, 2 லட்சம் டன் என்ற அளவில், சிறுதானிய பயிர்கள் மகசூல் கிடைக்கிறது. மாவட்டத்தில் சிறுதானிய தோல்களை நீக்க இயந்திரங்கள் இல்லாத நிலை உள்ளது.

இதனால், விவசாயிகள், சிறுதானியங்களில் இருந்து தோல்களை நீக்க, தேனி மாவடத்தில் உள்ள சிறுதானிய தோல் நீக்கி ஆலைகளுக்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இதுகுறித்து, விவசாயி ஜெகன் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் மேட்டு பாங்கான நிலங்கள் அதிகமாக உள்ளது. இதனால், இப்பகுதிகளில் அதிக அளவு, சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில், 20 ஆயிரம் ஹெக்டர் சாகுபடி செய்யப்படும், நெல் தோல்களை நீக்க, அதிக ரைஸ் மில்கள் உள்ளன.

ஆனால், 70 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ள, சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தர்மபுரி மாவட்டத்தில் ஒரு தொழிற் சாலை கூட இல்லை. இதனால், விவசாயிகள் சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தேனி மாவட்டம் உட்பட தென் மாவட்டங்களுக்கு எடுத்து செல்ல வேண்டி உள்ளது.

இதனால், விவசாயிகளுக்கு, கால விரயம், கூடுதல் செலவு ஏற்படுகிறது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டுள்ள, இடைத்தரகர்கள், விவசாயிகளிடம், சிறுதானிய பயிர்களை, குறைந்து விலைக்கு மொத்தமாக வாங்கி செல்கின்றனர். இவ்வாறு, இடைத்தரகர்கள், சிறுதானிய பயிர்களை, விவசாயிகளிடம், குறைந்த விலைக்கு வாங்கி, தேனி மாவட்டத்துக்கு, வாகனங்கள் மூலம் எடுத்து சென்று, தோல்களை நீக்கி, வியாரிகளிடம், அதிக விலைக்கு விற்று லாபம் பார்த்து வருகின்றனர்.

எனவே, தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம், விவசாயிகளின் நலன் கருதி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களிலும், விவசாயிகள் பங்களிப்புடன், சிறுதானிய, தோல் நீக்கும் ஆலைகளை நிறுவ, நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தோல் நீக்கிய சிறுதானிய பயிர்களை விற்பனை செய்ய, மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களிலும், அரசு விற்பனை மையம் துவங்க வேண்டும், என்றார்.

## <u>மழை பெய்வதால் காலநிலையில் மாற்றம்</u>

**பந்தலூர் :** பந்தலூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளதால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கேரளா மாநிலத்தில் ஜூன் மாதம் துவங்கும் தென்மேற்கு பருவழை நடப்பு ஆண்டில் தாமதமாகி வருகிறது. கடந்த

8ம்தேதி முதல் மேகமூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவி வந்த நிலையில், நேற்று காலை முதல் லேசான மழை பெய்து வருகிறது. இதனால், பந்தலூர் பகுதியில் நிலவி வந்த வெப்பமான காலநிலை மாறி, குளிர்ச்சியான காலநிலை நிலவுகிறது. தாசில்தார் ஹாரி கூறுகையில்,""மழை துவங்கியுள்ளதால், பந்தலூர் தாசில்தார் அலுவலகத்திற்கு உட்பட்ட அனைத்து துறை அதிகாரிகளும் தங்கள் தலைமையிடங்களில் இருக்க வேண்டும்; மழையால் ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டால் உடனடியாக தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்," என்றார்.

பந்தலூர் : பந்தலூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளதால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கேரளா மாநிலத்தில் ஜூன் மாதம் துவங்கும் தென்மேற்கு பருவமழை நடப்பு ஆண்டில் தாமதமாகி வருகிறது. கடந்த 8ம்தேதி முதல் மேகமூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவி வந்த நிலையில், நேற்று காலை முதல் லேசான மழை பெய்து வருகிறது. இதனால், பந்தலூர் பகுதியில் நிலவி வந்த வெப்பமான காலநிலை மாறி, குளிர்ச்சியான காலநிலை நிலவுகிறது. தாசில்தார் ஹாரி கூறுகையில்,""மழை துவங்கியுள்ளதால், பந்தலூர் தாசில்தார் அலுவலகத்திற்கு உட்பட்ட அனைத்து துறை அதிகாரிகளும் தங்கள் தலைமையிடங்களில் இருக்க வேண்டும்; மழையால் ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டால் உடனடியாக தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்," என்றார்.

தேனி : தேனியில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை அமோகமாக நடக்கிறது. இதனை தடுக்க வேண்டிய, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மெத்தனம் காட்டுகின்றனர்.

புகையிலை பொருட்கள் சிகரெட், புகையிலை கொண்டு தயாரிக்கப்படும் பாக்கு, பதப்படுத்திய புகையிலையை பயன்படுத்துதல், ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இந்த புகையிலை பொருட்களை பயன்படுத்துவதால், வாய் புற்றுநோய் அதிகரித்தது. சுவை அறியும் திறன் குறைந்தது. புகையிலை,மற்றும்

புகையிலையால் தயாரிக்கப்படும் பாக்குகளை பயன்படுத்துவோர் நாளுக்கு நாள் அதிகரித்தனர். இதனால், தமிழக அரசு புகையிலை பொருட்களுக்கு தடை விதித்தது.

ஆரம்ப காலத்தில், தேனி மாவட்டத்தில் உள்ள மொத்த விற்பனையாளர்கள், பெட்டி கடைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனையை கண்காணித்து வந்தனர்.சில இடங்களில் பறிமுதல் செய்தனர். தற்போது, "ஜீரோ' சதவீதம் புகையிலை, என ஒரு சாதாரண பாக்கு விற்பனையாகிறது. சில கடைகளில் தடைசெய்யப்பட்ட புகையிலையும் விற்பனையாகிறது. தேனி, வருஷநாடு, ஆண்டிபட்டி, கூடலூர், கம்பம், போடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடைகளில் தடைசெய்யப்பட்ட புகையிலை விற்பனை பொருட்கள் தடையில்லாமல் நடக்கிறது.

இதனை உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள் விற்பனையை தடைசெய்ய வேண்டும்.

உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மீனாட்சி சுந்தரம் கூறுகையில்," தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது குறித்து புகார்களின் பேரில், தொடர்ந்து சோதனை நடத்தி, புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து வருகிறோம். மீண்டும் சோதனைகளை துரிதபடுத்த உள்ளோம்,'

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு சென்னை வானிலை மையம் தகவல்




அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதால் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்யலாம் என்றும் சென்னையில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை அதன் சுற்றுபுறங்களில் நேற்று இரவு 2 மணி அளவில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யது இதனால் சென்னை நகர் முழுவதும் சாலைகளில் தண்ணீர் தேங்கி கிடந்தது. தாழ்வு பகுதியின் ஈரப்பதத்தை வங்கக்டல் உறிஞ்சியுள்ளதால் நேற்று மழை பெய்யதாக சென்னை வானிலை மையம் விளக்கம் அளித்துள்ளது. காட்டுக்குப்பம் 7 செ,மீ மழையும்,செம்பரபாக்கம் கேளம்பாக்கத்தில் தலா 6 செ.மீ

மழையும் பதிவுவாகியுள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு,வடமேற்கு நோக்கி நகரும் என எதிர்பார்க்கபட்டுள்ளது.

## மாம்பழத்தில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி



விருத்தாசலத்தில் மாம்பழத்தில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயார் செய்தல் குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

### மதிப்பூட்டப்பட்ட பொருட்கள்

உலகளவில் பழங்கள் உற்பத்தியில் நம் நாடு 2-வது இடம் வகித்து வருகிறது. இங்கு சரியான சீதோஷண நிலை இல்லாத காரணத்தினால், சிலகுறிப்பிட்ட காலங்களில் மட்டும் கிடைக்கும் பழங்கள் பாதுகாக்க வழியின்றி 30 முதல் 40 சதவீதம் வரையில் அழுகி வீணாகி வருகின்றது. அதன் அடிப்படையில் ஆண்டுக்கு 1.6 கோடி டன் வரையில் பழங்கள் வீணாகி வருகிறது.

ஏப்ரல், மே, ஜூன் மாதத்தில் அதிகளவில் விளைந்து சந்தையில் மிக குறைந்த விலையில் மாம்பழங்கள் கிடைக்கின்றன. இப்பழத்தை பயன்படுத்தி மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்களான ஸ்குமாஷ், ஜாம், சிரப், கேண்டி, மாம்பழபார், ஊறுகாய், மாங்காய் தொக்கு போன்ற அனைத்து வகையான

பதார்த்தங்களையும் தயார் செய்வது குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

பயிற்சி வகுப்பு

இதற்கு பேராசிரியர் மற்றும் தலைவர்(பொறுப்பு) மலர்கொடி தலைமை தாங்கினார். முனைவர் கண்ணன் மாம்பழத்திலிருந்து ஜாம், ஜூஸ், போன்றவற்றை வணிக முறையில் தயார் செய்வது, அவற்றை சந்தைப்படுத்தி விற்பனை செய்ய வேண்டியதற்கான வழிமுறைகள் குறித்து கம்ப்யூட்டர் மூலமாக பயிற்சி அளித்தார். மேலும் இது குறித்த செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.பயிற்சி வகுப்பில் மாவட்டத்தை சேர்ந்த 30 விவசாயிகள் வரையில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.இதில் இயற்பியல் வேளாண் நிலைய விஞ்ஞானிகளான சரவணன், வேங்கடலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் திட்ட உதவியாளர்(தொழில்நுட்பம்) மீனலட்சுமி நன்றி கூறினார்.

## வெளி மாநிலங்களில் இருந்து திண்டுக்கல்லுக்கு, 80 டன் சின்ன வெங்காயம் வரத்து



திண்டுக்கல் வெங்காய மண்டிகளுக்கு வெளிமாநிலங்களில் இருந்து 80 டன் அளவிலான சின்ன வெங்காயம் விற்பனைக்கு வந்துள்ளது. இதனால் சின்ன வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது.

சின்ன வெங்காயம்

திண்டுக்கல் வெங்காய மண்டிகளுக்கு, திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் விளைவிக்கப்படும் சின்ன வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுவது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக வரத்து இல்லாததால் தாராபுரம், உடுமலைபேட்டை, திருப்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம் இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

அவ்வாறு கொண்டு வரப்படும் சின்ன வெங்காயத்தை, புது வெங்காயம் என்கிறார்கள். நேற்று மட்டும் சுமார் 2 ஆயிரத்து 500 முட்டை புது வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த புது வெங்காயம் கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை ஆனது.

வெளிமாநிலங்களில் இருந்து

ஆந்திரா, மைசூர் ஆகிய பகுதிகளில் இருந்து திண்டுக்கல் வெங்காய மண்டிகளுக்கு 80 டன் அளவிலான சின்ன வெங்காயம் நேற்று விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வெங்காயம் ஒரு கிலோ ரூ.12 முதல் ரூ.18 வரை விற்பனை ஆனது. இதனால் விலை குறைவு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே துறையூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் இருப்பு வைத்திருந்த விதை வெங்காயங்களும் இப்போது விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த வெங்காயம் ஒரு கிலோ ரு.10 முதல் ரூ.16 வரை விற்பனை ஆகிறது. இது குறித்து வெங்காய மண்டி வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

விலை குறைவு

சின்ன வெங்காயத்தை பொறுத்தவரை கடந்த 2 மாதங்களாக விலை இல்லை. கடந்த வருடம் இந்த மாதங்களில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.40 முதல் ரூ.70 வரையிலும் சில நாட்களில் அதற்கு மேலும் விலை உயர்ந்து விற்பனை ஆனது. ஆனால் இப்போது நிலைமை அப்படி இல்லை. மைசூரில் இருந்து முன் கூட்டியே சின்ன வெங்காயம் விற்பனைக்கு வந்து விட்டது. இதனால் விலை குறைந்து போனது.

அதுமட்டுமின்றி இன்னும் 2 மாதத்திற்கு இதே விலை நிலவரம் நீடிக்கும். ஒரு வேளை மைசூரில் மழை பெய்தால் வரத்து குறையும். அதனால் இங்கு விலை உயர வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மலைக்கிராமத்தில் வேளாண்மை கல்லூரி மாணவிகள் ஆய்வு



கோபி அருகே மலைக்கிராமத்தில் ஆய்வுமேற்கொண்ட வேளாண்மை கல்லூரி மாணவிகள் நவீன தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளிடம் விளக்கி கூறினர்.

மாணவிகள்ஆய்வு

வேலூரில் உள்ள ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி

மாணவிகள் ஆர்.கிருத்திகாதேவி, கோல்டா மரியா சிரியக், யு.ஜெசீனா, ஆர்.பத்மபிரியா, சாந்தினி, வே.சுபஸ்ரீ ஆகியோர் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்திற்குவேளாண்மை பயிற்சிக்காக வந்தனர். இந்த மாணவிகள் கிராம மக்களிடம் சென்று விவசாயம் குறித்து ஆர்வமாக கேட்டறிந்தனர். மேலும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கி கூறினர்.

தோட்டக்கலை துறையில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவிகள் 6 பேரும் மலைக்கிராமத்திற்கு சென்று மலைக்கிராம மக்களின் வாழ்க்கை முறைகள் குறித்தும், அவர்களின் தொழில், விவசாயம் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர்.

மலைக்கிராமம்

கோபிசெட்டிபாளையம் அருகே அந்தியூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட தொட்டகோம்பை மலைக்கிராமத்திற்கு மக்கள் நலச்சங்கம் உதவியுடன் மாணவிகள் சென்றனர். சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் வனப்பகுதி வழியாக கரடு முரடான சாலையில் மாணவிகள் சரக்கு ஆட்டோ மூலம் தொட்டகோம்பைக்கு சென்றனர். அங்கு மலைவாழ் மக்களை சந்தித்த மாணவிகள் அவர்களின் வாழ்க்கை முறையில் உள்ள சிரமங்களை கேட்டறிந்தனர்.

மலைவாழ் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தொட்டகோம்பையில் கட்டப்பட்டு உள்ள தொகுப்பு வீடுகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்டவற்றை மாணவிகள் பார்வையிட்டனர். இந்த வசதிகள் மலைவாழ் மக்களுக்கு பயனுடையதாக உள்ளதா? என்பது குறித்து அவர்கள் தெரிந்துகொண்டனர். வனப்பகுதியில் பயிரிடப்படும் பயிர்களின் வகைகள் குறித்தும் மாணவிகள் கேட்டறிந்தனர்.

பஞ்சகாவியம்

இயற்கை முறையில் தயாரிக்கப்படும் 'பஞ்சகாவியம்' எனப்படும் பூச்சிமருந்து குறித்து கணக்கம்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கினார்கள். அப்போது செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

பால், மாட்டுச்சாணம், திருநீர், தயிர், நெய் ஆகிய 5 வகையான பொருட்களை ஒரு பானையில் ஊற்றி துணியால் கட்டி வைத்தனர். 15 நாட்களுக்கு பிறகு அந்த பானையில் உள்ள பூச்சி மருந்தை எடுத்து பயிர்களுக்கு தெளிப்பதன் மூலம் பயிர்களில் பூச்சிகள் வராமல் தடுக்கப்படுகிறது. மேலும், பயிர்களுக்கு இயற்கை உரமாகவும் இந்த பஞ்சகாவியம் பயன்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மாணவிகள் கூறியதாவது:–

புதிய அனுபவம்

தொட்டகோம்பை வனப்பகுதியில் மலைவாழ் மக்களை சந்தித்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்கள் மலைக்கிராமங்களுக்கு கரடு முரடான பாதையில் 5 கிலோ மீட்டர் பயணம் செய்தது புதிய அனுபவமாக உள்ளது. அங்கு மழை பெய்யவில்லை, தண்ணீர் இல்லை என்று பெரும்பாலானவர்கள் விவசாயத்தில் ஈடுபடாமல் உள்ளனர். அவர்கள் வனப்பகுதியில் ராகி போன்றவற்றை பயிரிடுகிறார்கள். எனவே கிடைக்கும் தண்ணீரை வைத்து விவசாயம் செய்வது குறித்த நவீன தொழில்நுட்பங்களை பற்றி மலைவாழ் மக்களிடம் நாங்கள் கூறிஉள்ளோம். மேலும் அவர்களுடைய வாழ்க்கை முறை, அடிப்படை வசதிகள், தொழில், பொழுதுபோக்கு உள்ளிட்டவற்றை நாங்கள் கேட்டு அறிந்துகொண்டோம். இதேபோல் கணக்கம்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பஞ்சகாவியம் தயாரிப்பது குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தோம். மேலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள இயற்கை விவசாயம், மண்புழு வளர்ப்பு ஆகியவை குறித்து நாங்கள் பயிற்சி பெற உள்ளோம். இவ்வாறு மாணவிகள் கூறினார்கள்.

## ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 3,500 டன் புழுங்கல் அரிசி தஞ்சை வந்தது



ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 3,500 டன் புழுங்கல் அரிசி தஞ்சைக்கு வந்தது.

### மத்திய தொகுப்பு

மத்திய தொகுப்பில் இருந்து பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக தமிழகத்திற்கு புழுங்கல் அரிசி, பச்சரிசி, கோதுமை போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இவைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இதேப்போல் தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, அரியலூர் மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக மத்திய தொகுப்பில் இருந்து வரும் அரிசி மூட்டைகள் தஞ்சையில் உள்ள மத்திய சேமிப்புக்கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டு பின்னர் லாரிகள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு வழங்கப்படும்.

### 3,500 டன் புழுங்கல் அரிசி

அதன்படி நேற்று ஆந்திர மாநிலம் காசிபேட் பகுதியில் இருந்து 3 ஆயிரத்து 500 டன் புழுங்கல் அரிசி நேற்று தஞ்சைக்கு 56 ரெயில் பெட்டிகள் மூலம் வந்தது. தஞ்சை ரெயில் நிலையத்தில் இருந்து லாரிகள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு

தஞ்சையில் உள்ள மத்திய சேமிப்புக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் பொருளுக்கு நியாய விலை தேவை!**

அரைகுறையான எந்தக் கொள்கை முடிவும் விரும்பிய நோக்கத்தை நிறைவேற்ற உதவாது. வேளாண் துறைக்கு அரசு அளிக்கும் அரைகுறை சலுகைகளால் எதிர்பார்த்தபடி விளைச்சல் பெருகாது. வங்கதேச அரசு நடப்பு வரவுசெலவுத் திட்டத்தில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க மானியங்கள் என்ற பெயரில் சில சலுகைகளை மட்டுமே அறிவித்துள்ளது; அதேசமயம் குறைந்தபட்சக் கொள்முதல் விலை தொடர்பாக எந்தவித உறுதியான அறிவிப்பும் இல்லாததால் விவசாயிகள் சாகுபடி செய்யத் தயங்குவார்கள். உரம், மின்சாரத்துக்காக மறைமுக மானியமாக 9,000 கோடி டாகாவை மட்டுமே அரசு ஒதுக்கியிருக்கிறது. நியாய விலையில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்காக எந்த நிதியையும் ஒதுக்கவில்லை. மானிய உதவி போன்ற சலுகைகளால் அதிக நிலப்பரப்பு சாகுபடியின் கீழ் வரக்கூடும், ஆனால், அரசு எதிர்பார்த்தபடி உணவு தானியங்கள், பருப்பு வகைகள் போன்றவற்றின் சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்ள மாட்டார்கள். சாகுபடிச் செலவைவிடக் கூடுதலாகக் கொள்முதல் விலை இருந்தால்தான் விவசாயிகள் அந்தப் பயிரைச் சாகுபடிக்குத் தேர்வுசெய்வார்கள். வெறும் மானியம்தான், கொள்முதல் விலையைத் திட்டவட்டமாக அறிவிக்க முடியாது என்ற நிலை இருந்தாலே விவசாயத்துக்கு வீழ்ச்சிதான். நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்புக்கு வேளாண் துறையின் பங்களிப்பு குறைந்துவருகிறது. வேளாண் துறையின் வீழ்ச்சியை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். நெல், கோதுமைச் சாகுபடி குறைந்து உள்நாட்டில் அவற்றின் விலை அதிகரித்தால் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிப்பதுடன் அரசியல் ஸ்திர நிலையும் ஆட்டம் காணும்.